Lakeridge Health

ஜூன் 12, 2020

**அன்பார்ந்த நண்பர்கள் மற்றும் அயலிடப் பெருமக்களுக்கு,**




டூறாம் பிரதேசத்திலும் லேக்றிட்ஜ் ஹெல்த் ஆரோக்கிய சேவை அமைப்பிலும் கோவிட்-19 நோயுக்கு எதிராக நிகழ்ந்து வரும் போராட்டம் பற்றிய புதிய தகவலினை உங்களுக்கு வழங்குவதில் நாம் மகிழ்ச்சி அடைகிறோம்.

கடந்த ஐந்து வாரங்களாக ஒன்ராறியோ மாகாணம் அடங்கிலும் வைத்தியசாலையில் அனுமதிக்கப்படுவோரின் விரைவு வீதம் குறைந்து வந்துள்ள அதே நேரத்தில் டூறாம் பிரதேசத்தில் அதன் மட்டம் சமாந்தர நிலைக்கு வந்துள்ளது. இதன் அர்த்தம் நாம் எமது அடிப்படையான பாதுகாப்பு நடவடிக்கைகளை மேலும் தொடர்ந்து செய்ய வேண்டும் என்பதாகும். எமது சக ஊழியர்கள், நண்பர்கள் எமது குடும்பத்தினர் போன்ற யாவரின் பாதுகாப்புக்காகவும் இதனை நாம் தொடர வேண்டும். இவ்வாறான எமது தளராத கூட்டு முயற்சி எம் அன்றாட வாழ்வில் முக்கிய ஓர் அம்சம் ஆகிவிட்டது. இதன் விளைவாக இந்த நோய்க்கு ஆளாகுவோரின் எண்ணிக்கை தொடர்ந்து சரிந்து கொண்டு வருவதை நாம் காண முடிகிறது. எனவே இது படிப்படியாக எமது பொருளாதார முயற்சி மற்றும் சமூகம் ஆகியவற்றின் கதவுகளை தொடர்ந்து திறப்பதற்கும், எமது வைத்தியசாலையில் வழங்கப்படும் சேவைகளை அதிகரித்து உயர்த்துவதற்கும் உதவிகரமாக இருக்கிறது.

## ஒன்ராறியோவில் புதிய யுக்தி முறைகள்

கடந்த சில வாரங்களாக ஒன்ராறியோ மாகாண அரசு கோவிட்-19 நோயின் ஓட்டத்தைத் தடுத்து நிறுத்துவதற்காகப் புதிய யுக்தி முறைகளை மக்கள் மத்தியில் கடைப்பிடிக்கும்படி அறிவித்து வந்துள்ளது.

முதலாவதாக, நோய்க்குரிய பரிசோதனை என்ற யுக்திமுறையை மாகாண அரசு விரிவாக்கி வருகிறது. இவ்வாறான அதிகரித்த பரிசோதனை முறையுடன் நோயாளர்களின் தொடர்பு வடத்தைத் தீவிர முறையில் பின் தொடர ஆரம்பிக்கும் பொழுது நோய் செறிந்துள்ள "வெப்ப வட்டங்களை" எமது உள்ளூர் பிரதேசங்களில், அயலிடப் பகுதிகளில், வேலைத்தலங்களில் அல்லது நீண்ட காலப் பராமரிப்பு இல்லங்களில் கூரிய முறையில் அடையாளம் கண்டு கொள்வது சாத்தியமாகிறது. நோயின் தொற்றினை விரைந்து கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருவதும் இதனால் முடிகிறது.

இரண்டாவதாக, மாகாண அரசு வெளி இடங்களைத் திறந்து விடும் முயற்சியில் பிரதேச வாரியான ஒரு முறையைப் பின்பற்றி வருகிறது. இன்றைய நிலையில், மாகாணத்தின் தீவிர நோயாளர்களில் 75 சதவீதமானவர்கள் ரொறொன்ரோ பெரும்பாக பிரதேசத்தை சேர்ந்தவர்களாக உள்ளனர். அதே

சமயம் மாகாணத்தின் மற்றைய பகுதிகளில் சமீப வாரங்களில் புதிய நோயாளர்கள் தோன்றுவது குறைவாகவோ அல்லது இல்லாமலோ உள்ளது.

டூறாம் பகுதியில் கோவிட்-19 தொடர்பிலான முன்னெடுப்புகளின் விளைவாக, லேக்றிட்ஜ் ஆரோக்கிய சேவைகள் அமைப்பு (Lakeridge Health) டூறாம் பிரதேச ஆரோக்கிய திணைக்களத்துடன் (Durham Region Health Department /DRHD) இணைந்து செயற்பட்டு வருகிறது. பரிசோதனை மற்றும் நோயாளர்களை கண்டு பிடித்தல் என்ற விடயங்களில் மிகச் சிறந்த பலன் தரும் முயற்சி மேற்கொள்ளப்படுவதை இது உறுதி செய்கிறது. நோயாளர் தொடர்புச் வடத்தைப் பின் தொடரும் பணியில் ஈடுபடக் கூடிய குழு ஒன்று பொதுசன ஆரோக்கிய நிறுவனத்திடம் (Public health) ஆயத்தமாக உள்ளது.

## விரிவாக்கப்பட்ட பரிசோதனை யுக்தி முறையின் விளைவாக டூறாம் பிரதேசத்தில் பரிசோதனைகள் அதிகரித்து உள்ளன

வைரசு நோய்க் கிருமியின் மீதான கட்டுப்பாட்டினை மேலும் கூட்டுவதற்காக, கோவிட்-19 நோயின் அறிகுறிகளில் ***ஏதோ ஒன்றினை*** வெளிக்காட்டுகின்ற ஒவ்வொரு நபரும் ***கட்டாயமாகப்*** பரிசோதனை செய்யப்படுதல் வேண்டும். இந்த நோய்க்கான அறிகுறிகளின் பட்டியல் ஒன்று லேக்றிட்ஜ் ஆரோக்கிய சேவைகள் அமைப்பின் இணையத்தளத்தில் பின்வரும் இணைப்பு வழியாகக் காணக் கூடியதாக உள்ளது: COVID-19 symptoms - June 2. (கோவிட்-19 அறிகுறிகள் – ஜுன் 2). கோவிட்-19 நோயுடைய மனிதர்களுடன் தாம் பழகி முகம் கொடுக்க நேரிட்டு இருக்கலாம் என்று நம்புகின்ற எந்த ஒரு நபரும் கட்டாயமாகப் பரிசோதிக்கப்படுதல் வேண்டும். தாமாகவே விரும்பித் தம்மைப் பரிசோதிக்க எண்ணுவோரும் இப்பரிசோதனையைப் பெறக் கூடியதாக உள்ளது.

கடந்த மே மாதம் 25ம் திகதி தொடக்கம் **எமது பரிசீலனை நிலையங்களில் (Assessment Centres) தினந்தோறும் செய்யப்படும் சோதனைத் துடைப்புகளின்(swabs) எண்ணிக்கை பிரமிக்கத் தக்க அளவு அதிகரித்து உள்ளது**. கூடுதலான நபர்களின் தேவையினைப் பூர்த்தி செய்வதற்காக இந் நிலையங்களின் பணி நேரங்களை நாம் நீடித்து இருக்கிறோம். தற்பொழுது மக்கள் தமது விண்ணப்பப் படிவத்தை சமர்ப்பித்து மூன்று முதல் 24 மணித்தியாலங்களுக்கு உள்ளாகப் பரிசோதிக்கப்படுவர். விண்ணப்ப எண்ணிக்கையின் அளவைப் பொறுத்து இந்த நேரம் வேறுபடுகிறது.

பரிசோதனை ஒன்றினை நீங்கள் பெறுவதற்கு கணினி வழியாக இவ்விடம் covidswab.lh.ca சென்று, அங்கு உள்ள படிவத்தினை நிரப்புங்கள். உங்கள் நேர்முகச் சந்திப்புக்கான அறிவுறுத்தல்கள் தானாகவே உங்கள் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்கப்படும். உங்களிடம் கணினி அல்லது வைபை (WiFi), வசதி என்று எதுவும் இல்லை என்றால், 1 800-841-2729 தொலைபேசி இலக்கத்தில் டூறாம் பிரதேச ஆரோக்கிய திணைக்களத்துடன் (DRHD) தொடர்பு கொண்டு உதவி பெறுங்கள். உங்களுக்கான நேர்முகச் சந்திப்பு ஏஜாக்ஸ் அல்லது ஓஷாவா நகரத்தில் உள்ள கோவிட் பரிசீலனை நிலையம்(COVID Assessment Centre) ஒன்றில் ஒழுங்கு செய்யப்படும். தீவிரமாகச் சுகவீனம் கொண்ட அல்லது மருத்துவ ரீதியாகப் பெருந்துயர் அனுபவிக்கும் ஒருவர், 911 தொலைபேசி இலக்கத்தை அழைத்து அவர்களின் உதவியுடன் எமது வைத்தியசாலையின் அவசரகாலச் சிகிச்சைப் பிரிவு ஒன்றில் கவனிக்கப்படுதல் வேண்டும்.

லேக்றிட்ஜ் ஆரோக்கிய சேவைகள் அமைப்பு மற்றும் டூறாம் பிரதேச ஆரோக்கிய திணைக்களம் ஆகியன, சிகிச்சை நிலையங்கள் மற்றும் உள்ளூர் வர்த்தக நிறுவனங்கள் ஆகியவற்றுடன் இணைந்து பரிசோதனை நடவடிக்கையினை மேலும் கூட்டுவதற்கு உரிய தெரிவுகளை ஆராய்ந்து வருகின்றன.

டூறாம் பிரதேசத்தின் வேறு பகுதிகளில் பரிசோதனை நிலையங்களைத் திறப்பது பற்றியும் ஆராயப்படுகிறது. இதுபற்றி மேலும் விபரங்களை எதிர்பாருங்கள்.

## சத்திர சிகிச்சைகள் மற்றும் வேறு மருத்துவ செயல்முறைகள்

அவசரகாலச் சத்திர சிகிச்சை செய்வதை நாம் எப்பொழுதுமே பின்பற்றி வந்திருக்கிறோம். முன்னுரிமை வாரியாகப் புற்று நோய் வகை மற்றும் புற்று நோய் இல்லாத வகையிலான சத்திர சிகிச்சைகளை நாம் மீண்டும் செய்வதற்கு ஆரம்பித்து விட்டோம். தெரிவுச் சிகிச்சை வகையிலான சத்திர சிகிச்சைகளில்(elective surgeries) சிலவற்றைச் செய்வதற்கும் நாம் இதுவரை ஊக்கத்துடன் திட்டமிட்டு வந்திருந்தோம். இந்த வாரம் இம்மாதிரியான தெரிவுச் சிகிச்சை வகையிலான சத்திரசிகிச்சைகளில் சிலவற்றை செய்ய ஆரம்பித்து இருக்கிறோம். அடுத்து வரும் பல மாதங்களில இதனைப் படிப்படியாக அதிகரிப்பதற்கு தொடர்ந்து கவனமாகத் திட்டமிட வேண்டி உள்ளது. முடிந்த அளவு பாதுகாப்பான ஒரு முறையில் வேகமாக இத்தகைய தெரிவுச் சிகிச்சை வகையிலான சத்திரசிகிச்சைகளின் எண்ணிக்கையை நாம் அதிகரிப்போம். இவ்வாறு இருந்த போதிலும் எமது பிரதேசத்திலும் எமது வைத்தியசாலைகளிலும் கோவிட்-19 நோயாளர் எண்ணிக்கை அதிகரிக்க நேர்ந்தால், மீண்டும் ஒரு முறை சத்திரசிகிச்சைகளின் எண்ணிக்கையைக் குறைக்க வேண்டிய ஒரு நிலைமைக்கு நாம் தள்ளப்படுவோம்.

## ஓர்ச்சார்ட் வில்லா இல்லத்தில் நோய் விரைந்து பரவியதைக் கட்டுப்படுத்தியமை

ஓர்ச்சார்ட் வில்லா(Orchard Villa) நீண்டகால பராமரிப்பு மற்று ஓய்வுகால இல்லத்தில் நிகழ்ந்த கோவிட்-19 நோயின் விரைவுப் பரவல்(outbreak) முடிந்து விட்டது என்று டூறாம் பிரதேச ஆரோக்கிய திணைக்களம் பிரகடனம் செய்துள்ளது. இதனை லேக்றிட்ஜ் ஆரோக்கிய அமைப்பு மகிழ்ச்சியுடன் தெரிவிக்கிறது. கடந்த இரண்டு வாரங்களாக ஓர்ச்சார்ட் வில்லா இல்லத்தில் புதிய நோயாளர்களாக எவரும் உறுதி செய்யப்படவில்லை. இந்த வைரசுக் கிருமிக்கு உள்ளாகி குணமடைந்தவர்களாகத் தற்பொழுது 155 வதிவாளர்கள் இங்கு உள்ளனர்.

ஏழு வாரங்களுக்கு முன்பாக கோவிட் நோயின் விரைவுப் பரவலுக்கு எதிர்வினையாக எடுக்கப்பட்ட முயற்சிக்கு தலைமை தாங்கி, லேக்றிட்ஜ் ஆரோக்கிய சேவைகள் அமைப்பு ஓர்ச்சார்ட் வில்லா இல்லத்தினுள் சென்ற சமயத்தில், இந்த வதிவிட இல்லத்தின் பணியாளர்கள் மற்றும் கனேடிய யுத்தப் படையினர் ஆகியோரின் கூட்டு முயற்சியுடன் நாங்கள் விரைவுப் பரவலினைக் கட்டுப்படுத்த உடனடி நடவடிக்கையில் இறங்கினோம். நோயின் விரைவுப் பரவலை மேலாண்மை செய்து வேண்டிய ஆதார உதவிகளை ஒழுங்குபடுத்தி அங்குள்ள வதிவாளர்களுக்கு மிகச் சிறந்த பராமரிப்பு கிடைக்க வழிசெய்தோம். வதிவாளர்களின் சுகநலத்துக்கு மிக முக்கியமாக அமையும் சில அத்தியாவசிய சேவைகள் மற்றும் செயற்பாடுகளைப் பாதுகாப்பான முறையில் அங்கு மீண்டும் வழங்கக் கூடியதாக இருப்பது பற்றி நாம் மகிழ்ச்சி அடைகிறோம்.

இந்த மிகமுக்கிய பணியில் ஈடுபட்ட லேக்றிட்ஜ் ஆரோக்கிய சேவைகள் குழுவினர் மற்றும் இப்பணிக்கு ஆதரவாக உதவி வழங்கிய ஓர்ச்சார்ட் வில்லா பணியாளர்கள் ஆகியோர் பற்றி நாம் பெருமிதம் அடைகிறோம். அடுத்து வரும் வாரங்களில் லேக்றிட்ஸ் ஆரோக்கிய சேவைகள் அமைப்பு ஓர்ச்சார்ட் வில்லாவின் மேலாண்மை முயற்சியில் மேலும் தீவிரமான ஒரு பங்கினை வகித்து, அந்த ஸ்தலத்தில் கடுமையான உழைப்பினை மேற்கொண்டு வரும் சேவைக்குழுவினருக்கும் மேலதிக ஆதார உதவியை வழங்க உள்ளது.

## இணையம் வழியாக நடைபெறவுள்ள எமது வருடாந்த பொதுக் கூட்டத்தில் ஜுன் 18 திகதியன்று இணைந்து கொள்ளுங்கள்!

லேக்றிட்ஜ் ஆரோக்கிய சேவைகள் அமைப்பின் இணையம் வழியாக நடைபெறும் முதலாவது வருடாந்த பொதுக் கூட்டம் (AGM) **வியாழக்கிழமை, 2020 ஜுன் 18 திகதியன்று மாலை 6:00 மணி முதல் 7:00 மணி வரை நடைபெறும்.**

கடந்த வருடத்தின் பெரும்பகுதி நாட்களில் டுறாம் பிரதேசத்தில் வாழ்ந்து, தொழில் புரிந்து வந்த ஆயிரக்கணக்கான மக்களுக்கு லேக்றிட்ஜ் ஆரோக்கிய சேவைகள் அமைப்பின் திறமை வாய்ந்த சேவைக் குழுவினர் கருணையுடன் கூடிய முறையில் மருத்துவ பராமரிப்பு மற்றும் சேவைகளை வழங்கி வந்துள்ளனர்.

இந்த வருடம் நடைபெற உள்ள AGM வருடாந்த பொதுக் கூட்டத்தில் அத்தியாவசியமான வியாபார விடயங்களில் விசேட கவனம் செலுத்தப்படும். எமது அமைப்பின் நம்பிக்கைப் பொறுப்பாளர்களைத் தெரிவு செய்தல், பொருளாளரின் அறிக்கையை ஏற்றுக் கொள்ளல், கணக்குப் பரிசோதகர்களை நியமித்தல் போன்ற நிகழ்வுகள் இதில் அடங்கும். லேக்றிட்ஜ் ஆரோக்கிய சேவைகள் அமைப்பு(Lakeridge Health) மற்றும் டுறாம் உளநல ஆரோக்கிய சேவைகள் அமைப்பு(Durham Mental Health Services) ஆகியவற்றினை தன்னார்வ முறையில் ஒன்றிணைப்பது பற்றி முன்மொழியப்பட்டு உள்ள விடயமும் இங்கு எடுத்துக் கொள்ளப்படும். அத்துடன் 2019/20 ஆண்டுக் காலத்தில் நாம் அடைந்த பிரமாத சாதனைகள் பற்றியும் கொண்டாடுவதற்கு இருக்கிறோம். எமது சமூகங்களின் மக்கள் மத்தியில் நாம் வழங்கிய பாதுகாப்பான உயர்தரம் கொண்ட ஆரோக்கிய பராமரிப்பு மற்றும் கோவிட்-19 நோயுடன் போராட நாம் எடுத்த கூட்டு முயற்சிகள் என்பவை எம் சாதனைகளில் அடங்கும்.

இப்பொதுக் கூட்டத்தில் இணைந்து கொள்வதற்கு உங்களிடம் குறோம்(Chrome), சபாரி(Safari), எட்ஜ்(Edge), அல்லது பயர்பொக்ஸ்(Firefox) ஆகிய தேடலிகளில் ஒன்றின் மிகப்பிந்திய வடிவம் இருக்க வேண்டும். **நேரடித் தொடர்பினை ஏற்படுத்த நீங்கள் செல்ல வேண்டிய இடம்**:
**https://web.lumiagm.com/220546017**

ஆண்டு 2020 இன் ஆரம்ப நாட்களில் கோவிட்-19 பெரும்புல நோய்க்கு எதிர்வினையாக எமது முயற்சியை நாம் அதிகரிக்கத் தொடங்கிய காலம் தொட்டு, டுறாம் பிரதேசம் முழுவதும் அடங்கலாக மக்களில் ஒவ்வொருவரிடம் இருந்தும் எமக்குக் கிடைத்த நிபந்தனையற்ற ஆதரவு லேக்றிட்ஜ் ஆரோக்கிய சேவைகள் அமைப்பின் வலுவினை உயர்த்தி வந்துள்ளது.

எமது அனுபவத்தில் முன்னர் பயணித்து இருக்காத புதிய பிரதேசம் போன்ற நிலைமையின் கீழ் நாம் எல்லோரும் ஒன்றாக வழிகண்டு முன்செல்லும் இச்சமயத்தில், நீங்கள் எமக்கு வழங்கும் உறுதியான ஆதரவு மற்றும் பரிவுக்கு நாம் நன்றி கூறுகிறோம்.

உங்களுக்கு நல்ல ஆரோக்கியம் அமைய வாழ்த்துகிறோம்.

| | |
|---|---|
| சூசன் டிறிக் | ரோனி ஸ்ரோன் |
| இடைக்காலத் தலைவர் மற்றும் CEO | பணியாளர்குழுத் தலைவர் |
| Susan deRyk | Tony Stone |
| Interim President and CEO | Chief of Staff |